# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்)

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்*
*அவர்களால் 2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, சனவரி மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **285 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் சட்டமூலத்திற்கான அட்டவணையில் காணப்படுகின்ற (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் குறித்த சில பிரிவுகளைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவுகளின் சட்டப்பயனானது இயைபான தவறுகள் தொடர்பில் விதிக்கப்பட்ட குற்றப் பணங்களை அதிகரிப்பதாகும்.*

ச.வ.- ஓ.45/2019

**(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட 19 ஆம் அத்தியாயத்தின் குறித்தசில பிரிவுகளைத் திருத்துதல்*

**2.** இதற்கான அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள், அதன் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் விதிக்கப்பட்ட தண்டங்களை அதிகரிக்கும் நோக்கத்துக்காக நிரல் III இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக் கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக அவ்வட்டவணையின் நிரல் IV இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

*ஐயத்தைத் தவிர்த்தல்*

**3.** ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் புரியப்பட்டவிடத்து, அத்தகைய தவறுதொடர்பில் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை** [பிரிவு 2]

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* | *நிரல் IV* |
|---|---|---|---|
| *பிரிவு* | *தவறு* | *தற்போதைய சொற்கள்* | *திருத்தப்பட்ட சொற்கள்* |
| 137 | தரைப்படை வீரர், மாலுமி அல்லது வான்படை வீரர் பயன்படுத்தும் உடையைத் தாம் அத்தகைய தரைப்படை வீரர், மாலுமி அல்லது வான்படை வீரர் என நம்பப்படலாம் என்ற உளக் கருத்துடன் அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தைக் கொண்டு செல்லுதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 151 | கலகம் முதலியன பற்றிக் காணிச் சொந்தக்காரர் அல்லது இருப் பாட்சியாளர் தகவல் தராமை | ஆயிரம் ரூபாவுக்கு | பத்தாயிரம் ரூபாவுக்கு |
| 157 | பொதுவிடச் சண்டை புரிதல் | நூறு ரூபா வரையிலான | பத்தாயிரம் ரூபா வரையிலான |
| 165 | அஞ்சல் அல்லது தொலைத் தொடர்புத் திணைக்களப் பகிரங்க சேவையாளரின் தீய ஒழுக்கம் | ஐம்பது ரூபா வரை | இருபதாயிரம் ரூபா வரை |
| 169 | மோசடியான உளக்கருத்துடன் பகிரங்க சேவையாளரால் பயன் படுத்தப்படும் உடையை அணிதல் அல்லது அவரது அடையாளச் சின்னத்தைக் கொண்டு செல்லுதல் | நூறு ரூபாவரை | இருபத்தை யாயிரம் ரூபாவரை |
| 169உ | தேர்தல் ஒன்று தொடர்பிலான இலஞ்சம் | ஐந்நூறு ரூபாவுக்கு | ஒரு மில்லியன் ரூபாவுக்கு |
| | விருந்தளித்தல் மூலமான இலஞ்ச மானால் | இரு நூறு ரூபாவுக்கு | ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு |
| 169 ஊ | தேர்தல் ஒன்றில் தகாத செல்வாக்கு | ஐந்நூறு ரூபாவுக்கு | ஒரு இலட்சம் ரூபாவுக்கு |
| | தேர்தல் ஒன்றில் ஆள்மாறாட்டம் செய்தல் | முந்நூறு ரூபாவுக்கு | ஒரு இலட்சம் ரூபாவுக்கு |

| | | | |
|---|---|---|---|
| 169 ஏ | தேர்தல் கணக்குகளை வைத்தி ருக்கத் தவறுதல் | முந்நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 170 | பகிரங்க சேவையாளரின் அழைப்புக் கட்டளை அல்லது வேறு கட்டளை சேர்ப்பிக்கப்படாது தவிர்ப்பதற் கெனத் தலைமறைவாக இருத்தல் | ஐம்பது ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| | அழைப்புக் கட்டளை அல்லது அறிவித்தல், நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கான தாயின் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 171 | ஏதேனும் அழைப்புக்கட்டளை அல்லது அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுதலை அல்லது ஒட்டப்படுதலைத் தடுத்தல் அல்லது அது ஒட்டப்பட்டிருக்கும் போது அகற்றுதல் அல்லது பிரகடனம் செய்யப்படுதலைத் தடுத்தல் | ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக்கூடிய | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக்கூடிய |
| | அழைப்புக்கட்டளை முதலியன நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற் கானதாயின் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 172 | குறித்த ஓர் இடத்தில், நேரிலோ அல்லது முகவர் மூலமோ சமுகமாயிருக்கும்படியான சட்ட முறையான கட்டளைக்குப் பணியாமை அல்லது அதிகார மில்லாமல் அங்கிருந்து அகன்று செல்லல் | ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக்கூடிய | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | அக்கட்டளை சட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது முகவர் மூலமோ தோன்றுவதற்கான தாயின் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 173 | பகிரங்க சேவையாளர் ஒருவருக்கு ஆவணம் ஒன்றினைக் காண்பிப்ப தற்கு அல்லது சேர்ப்பிப்பதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆள் ஒருவர் அதனை வேண்டுமென்று காண்பிக்கத் தவறுதல் | ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக் கூடிய | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக் கூடிய |
| | ஆவணமானது நீதிமன்றமொன்றின் முன்னர் காண்பிக்கப்படவேண்டிய தொன்றாயின் அல்லது ஒப்படைக்கப் பட வேண்டியதொன்றாயின் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 174 | பகிரங்க சேவையாளருக்கு அறி வித்தல் அல்லது தகவல் கொடுக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஆளொருவர் அதனை அச்சேவை யாளருக்கு வேண்டுமென்று கொடுக்காது விடல் | ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக் கூடிய | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக் கூடிய |
| | தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் அல்லது தகவல் தவறொன்று புரியப்படுதல் தொடர்பிலான தாயின் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| *175* | பகிரங்க சேவையாளருக்கு அறிந்து கொண்டு தவறான தகவலைத் தருதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *176* | பகிரங்க சேவையாளரொருவரால், சத்தியஞ் செய்துகொள்ள முறைப்படி தேவைப்படுத்தப்படுமிடத்து சத்தியஞ் செய்ய மறுத்தல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *177* | சட்டப்படி உண்மை சொல்லக் கட்டுப்பட்டவர், விடையளிக்க மறுத்தல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *178* | சட்டப்படி கையொப்பமிடுமாறு தேவைப்படுத்தப்பட்டவர், பகிரங்க சேவையாளருக்குச் செய்யப்பட்ட கூற்றொன்றினைக் கையொப்பமிட மறுத்தல் | நூறு ரூபாவரை | இருபதாயிரம் ரூபாவரை |
| *180* | எவரேனுமாளுக்கு ஊறு விளை விக்கும் அல்லது தொந்தரவு தரும் வகையில் பகிரங்க சேவை யாளரை அவரின் சட்டமுறைத் தத்துவத்தைப் பயன்படுத்தச் செய்யும் உளக்கருத்துடன் பொய்த் தகவல் கொடுத்தல் | ஆயிரம் ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| *181* | பகிரங்க சேவையாளரொருவரின் சட்டமுறையான அதிகாரத்தின் மீது ஆதனமெடுக்கப்படுதலை எதிர்த்தல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *182* | பகிரங்க சேவையாளரொரு வரின் அதிகாரத்தின் மீது விற்க முனையப்படும் ஆதனத்தின் விற்பனையைத் தடைசெய்தல் | ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியற்றண்ட னையினால் அல்லது நூறு ரூபாவரை செல்லக்கூடிய குற்றப்பணத் தினால் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்ட னையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக்கூடிய குற்றப்பணத் தினால் |

| | | | |
|---|---|---|---|
| 183 | பகிரங்க சேவையாளர் அவரது பகிரங்கப் பணிகளை நிறைவேற்று வதில் தடைசெய்தல் | மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான இருவகை யிலொருவகை மறியற்றண்ட னையினால் அல்லது நூறு ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தி னால் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியற்றண்ட னையினால் அல்லது இருபத்தை யாயிரம் ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தி னால் |
| 184 | பகிரங்க சேவையாளருக்கு உதவியளிக்கச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ளபொழுது உதவி யளிக்காது விடல் | ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியற்றண்ட னையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் | மூன்று மாதங்கள் வரை நீடிக்கக் கூடிய ஒரு காலத்திற் கான சாதாரண மறியற்றண்ட னையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தி னால் |
| | மன்றாணையை நிறைவேற்றுதல், தவறுகள் முதலியவற்றைத் தடுத்தல் முதலியவற்றில் உதவி கோருபவரான பகிரங்க சேவை யாளர் ஒருவருக்கு உதவிசெய் யாது வேண்டுமென்று கவனயீன மாக இருத்தல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| 185 | பகிரங்க சேவையாளரொருவரால் முறைப்படி வெளிப்படுத்தப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியாமை, அத்தகைய கீழ்ப்படியாமை சட்டப்படி தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஆட்களுக்குத் தடை, மனக் குலைவு அல்லது ஊறு ஏற்படுத்துவதாயின் | ஒரு மாதம் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பது ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் | மூன்று மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது இருபதாயிரம் ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் |
| | அத்தகைய கீழ்ப்படியாமை மனிதவுயிருக்கு, உடனலத்திற்கு அல்லது பாதுகாப்புக்கு அபாயம் ஏற்படுத்தினால் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் அல்லது நூறு ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான சாதாரண மறியற்றண்டனையினால் அல்லது ஐம்பதாயிரம் ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் |
| 219 அ | குடியியல் மன்றாணையின் கீழ்ச் சட்டமுறையாகக் கைது செய்யப் படுதலை எதிர்த்தல் அல்லது தடை செய்தல் | நூறு ரூபாவுக்கு | இருபதாயிரம் ரூபாவுக்கு |
| 223 | நீதிமுறை நடவடிக்கையின் எக் கட்டத்திலேனும் அமர்ந்துள்ள பகிரங்க சேவையாளரை வேண்டுமென்று நிபந்தனை செய்தல் அல்லது இடையீடு செய்தல் | ஆயிரம் ரூபாவுவரை | ஐம்பதாயிரம் ரூபாவுவரை |
| 265 | விற்கக் கருதப்பட்டுள்ள உணவை அல்லது பானத்தைக் கேடு உண்டாக்கும் உணவாகக் கலந்து கொடுத்தல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| 266 | கேடு உண்டாக்கும் என அறிந்து கொண்டு ஏதேனும் உணவை அல்லது பானத்தை உணவாகவும் பானமாகவும் விற்றல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 267 | விற்பனைக்குள்ள ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அதன் ஆற்றல் குறையும் வண்ணம் அல்லது அதன் செயற்பாட்டை மாற்றும் அல்லது கெடுதியான தாக்கும் வண்ணம் கலந்திளக்கமாக்குதல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 268 | ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை அது கலந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொண்டு, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல் அல்லது மருந்துச் சாலையிலிருந்து வழங்குதல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 269 | ஏதேனும் மருந்துப் பொருளை அல்லது மருந்துத் தயாரிப்பை வேறொரு மருந்துப் பொருளாக அல்லது தயாரிப்பாக விற்றல் அல்லது மருந்துச் சாலையிலிருந்து வழங்குதல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 270 | பொது நீருற்றின் அல்லது நீர்த்தேக் கத்தின் நீரை அசுத்தப்படுத்தல் | மூன்று மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத் திற்கான இருவகையி லொருவகை மறியற்றண்ட னையினால் அல்லது ஐம்பது ரூபா வரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் | ஆறு மாதங்கள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத் திற்கான சாதாரண மறியற்றண்ட னையினால் அல்லது ஒரு இலட்சம் ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் |
| 271 | வளிமண்டலத்தை உடனலத்துக்குக் கேடு உண்டாக்குவதாக்கல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| 272 | உயிர் வாழ்வுக்கு ஆபத்தான வகையில் பகிரங்க வழி ஒன்றில் அசட்டுத் துணிவாக அல்லது கவனயீனமாக வாகனம் ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல் முதலியன | ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனையினால் அல்லது நூறு ரூபாவரை செல்லக்கூடிய குற்றப் பணத்தினால் அல்லது இவையிரண்டினாலும் | இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணத்தினால் மற்றும் இரண்டாவது குற்றத் தீர்ப்பொன்றின் மீது முப்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எழுபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணத்தினாலும் அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதினாலும் அத்துடன் மூன்றாவது அல்லது அடுத்துப் பின்னரான குற்றத்தீர்ப்பொன்றின்மீது எழுபத்தையாயிரம் ரூபாவுக்கு குறையாத குற்றப்பணமொன்றினால் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப் பகுதியொன்றிற்கான கடூழிய |

| | | | |
|---|---|---|---|
| | | | மறியற் றண்டனையினால் அல்லது அத்தகைய குற்றப் பணம் மற்றும் மறியற் றண்டனை ஆகிய இரண்டினாலும் அவரது உரிமம் இல்லாதாக்கப் படுவதினாலும் |
| 273 | மனித உயிருக்கு ஆபத்து ஏற் படுத்தும் வகையில் கலம் ஒன்றை அசட்டுத் துணிவாக அல்லது கவன யீனமாகச் செலுத்துதல் முதலியன | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 275 | உயிர் வாழ்வுக்கு ஆபத்து ஏற் படுத்தக்கூடிய வகையில் அளவுக்கு மிஞ்சிப் பாரமேற்றப்பட்டுள்ள அல்லது பாதுகாப்பற்ற கலத்தில் நீர்மீது வாடகைக்கு ஆளை ஏற்றிச் செல்லல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 276 | பகிரங்க வழி எதிலும் அல்லது கலத்தின் பாதையில் ஆபத்து அல்லது தடை அல்லது ஊறு ஏற்படுத்துதல் | நூறு ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் | ஐம்பதாயிரம் ரூபாவரை செல்லக் கூடிய குற்றப் பணத்தினால் |
| 277 | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் நச்சுப் பதார்த் தத்தைக் கையாளுதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| *278* | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் தீயை அல்லது எளிதில் தீப்பற்றக்கூடிய பொருளைக் கையாளுதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *279* | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் ஏதேனும் வெடிப் பொருளைக் கையாளுதல் | நூறு ரூபாவரை | எழுபத்தை தாயிரம் ரூபாவரை |
| *280* | மனித உயிர் முதலியவற்றுக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியதான வகையில் இயந்திரத்தைக் கையாளுதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *281* | ஏதேனும் கட்டடத்தை இடித்து வீழ்த்துவதில் அல்லது பழுது பார்த்தலில் உரிமையுள்ளவரான ஆள், அவ்வாறு வீழ்த்துவதினால் அல்லது பழுது பார்த்தலினால் மனித உயிருக்கு உண்டாகக்கூடிய ஆபத்திலிருந்து காப்பதற்குத் தவறுதல் | நூறு ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *282* | தமது உடைமையிலுள்ள ஏதேனும் விலங்கு தொடர்பில், அத்தகைய விலங்கினால் மனித உயிருக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து அல்லது கடும் காயத்திலிருந்து காப்பதற்கு ஒழுங்கு செய்யாது விடுதல் | நூறு ரூபாவரை | இருபதாயிரம் ரூபாவரை |
| *283* | பொதுத் தொல்லை புரிதல் | ஐம்பது ரூபாவரை | இருபதாயிரம் ரூபாவரை |
| *314* | வேண்டுமென்று காயம் விளைத்தல் | ஆயிரம் ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| *325* | ஆத்திரமூட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத் தக் கருதாது பாரதூரமான திடீர் ஆத்திரமூட்டப்படுதலின்மீது, வேண்டுமென்று காயம் விளைத்தல் | ஐம்பது ரூபாவரை | இருபதாயிரம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| 326 | ஆத்திரமுட்டலை ஏற்படுத்திய ஆளைத் தவிர்ந்த வேறு ஆள் எவர்க்கேனும் காயம் ஏற்படுத்தக் கருதாது பாரதூரமான திடீர் ஆத்திரமுட்டப்படுதலின்மீது வேண்டுமென்று கடுங்காயம் விளைத்தல் | இரண்டாயிரம் ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 327 | மனித உயிருக்கு அல்லது பிறரின் காப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய செயல் எதனையும் அசட்டையாக அல்லது கவனவீன மாகச் செய்தல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 328 | மனித உயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக்கூடிய செயலொன்றினை அசட்டையாக அல்லது கவனயீனமாகச் செய்தலினால் காயம் விளைத்தல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 329 | மனித உயிருக்கு ஆபத்து முதலியன ஏற்படுத்தக்கூடிய செயலொன்றினை அசட்டையாக அல்லது கவனயீனமாகச் செய்தலினால் கடுங்காயம் விளைத்தல் | ஆயிரம் ரூபாவரை | ஒருஇலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 332 | எவரேனுமாளை முறைகேடாகத் தடுத்து வைத்தல் | ஐம்பது ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 333 | எவரேனுமாளை முறைகேடாக அடைத்து வைத்தல் | ஆயிரம் ரூபாவரை | ஐந்து இலட்சம் ரூபாவரை |
| 343 | பாரதூரமான தாக்குதல் அல்லது ஆத்திரமுட்டப்பட்டதன் மீதன்றி குற்றமுறையாக வலோத்காரத்தைப் பிரயோகித்தல் | ஐம்பது ரூபாவரை | ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 348 | முறைகேடாக ஆளை அடைத்து வைக்க எத்தனிப்பதில் தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோத்காரம் புரிதல் | ஓராயிரம் ரூபாவரை | ஐந்து இலட்சம் ரூபாவரை |

| | | | |
|---|---|---|---|
| 349 | பாரதூரமான திடீராத்திரமூட்டப் படுதலின் மீது தாக்குதல் அல்லது குற்றமுறையான வலோற்காரம் புரிதல் | ஐம்பது ரூபாவரை | இருபதாயிரம் ரூபாவரை |
| 433 | குற்றமுறையான அத்துமீறல் | நூறு ரூபாவரை | ஒரு இலட்சம் ரூபாவரை |
| 434 | வீடத்துமீறல் | ஆயிரம் ரூபாவரை | ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவரை |
| 450 | சட்டவிரோதமான நோக்கங் களுக்காகக் கட்டடம் முதலிய வற்றில் காணப்படுதல் | ஐம்பது ரூபாவுக்கு | இருபதாயிரம் ரூபாவுக்கு |
| 451 | பெயர்பெற்ற திருடன் அலைந்து திரிதல் | ஐம்பது ரூபாவுக்கு | இருபதாயிரம் ரூபாவுக்கு |
| 487 | அநாமதேயத் தகவல்மூலம் அல்லது அச்சுறுத்தல் எங்கிருந்து வருகிறதென்பதை மறைப்பதற்கு முன்னெச்சரிக்கை செய்து கொண்டு குற்றமுறையான அச்சுறுத்தல் | இரண்டு ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகை யிலொரு வகை மறியலினால் | இரண்டு ஆண்டுகள் வரை நீடிக் கக்கூடிய ஒரு காலத்திற்கான இருவகையி லொருவகை மறியற்றண்ட னையினால் அல்லது குற்றப் பணத்தினால் அல்லது இவை இரண்டி னாலும் |